சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**<u>அசல் வழக்கு எண்.56/2025</u>**

வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. குமார் | த/பெ: ராஜவடிவேல் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 22.04.2026 | தாலுக்கா: |

<u>முதல் விசாரணை...</u>

இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல்விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதி வாதியிடம் எதற்காக பணம் கேட்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் பணம் எங்கே வைத்து கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் வீட்டில்தான் திண்ணையில் வைத்து பணம் கொடுத்தார். வாதியின் வீடு எந்த திசையை நோக்கி வாசல் உள்ளது என்றால் மேற்கு பார்த்த வாசல் கொண்ட வீடாகும். பணம் கொடுக்கும் போது வாதி, பிரதிவாதி, நான், பிரதிவாதியின் கணவர் மற்றும் ஒருவர் இருந்தார். அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. கடனுறுதிச்சீட்டு அச்சடித்து இருந்ததை காலியிடத்தை வாதி பூர்த்தி செய்தார். தொகை எந்த ரூபாய் நோட்டுக்களாக கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வாதி சொல்லிக்கொடுத்ததன் பேரில் ஏதோ வாதி, பிரதிவாதிக்கு

பணம் கொடுத்ததாகவும் அதற்காக வாதி, பிரதிவாதிக்கு கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுத்ததாகவும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வாதியின் வீடு மேற்கு பார்த்த வாசல் இல்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி வீட்டில் வைத்து பிரதிவாதி கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுத்ததாகவும் நான் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ரூ.5,00,000/- பணம் தேவையில்லை என்றாலும் ஒரே நேரத்தில் வாதி ரூ.5,00,000/- ஐ பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.